*56*

# “ஆண்டவரே, எங்களுக்கு ஜெபிக்கக் கற்றுத்தாரும்”

## லூக். 11:1-13, ஒரு ஆழ்ந்த கண்ணோட்டம்

*பல விஷயங்களை - எவ்வாறு போதித்துப் பிரசங்கிப்பது, எவ்வாறு காட்சி உதவிப்பொருட்களைத் தயாரிப்பது, எவ்வாறு எழுதுவது, பொருட் களைப் பயன்படுத்தக்கூடிய வடிவில் எவ்வாறு ஒழுங்குபடுத்துவது என்பதைப் பற்றிக்கூட - எவ்வாறு செய்வது என்பதைக் காண்பிக்கும்படி நான் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளேன், ஆனால் ஒருவர்கூட என்னிடத்தில் எப்போதாவது வந்து, “டேவிட், எனக்கு ஜெபிக்கக் கற்றுத்தாருங்கள்” என்று கூறியதே இல்லை. இருப்பினும் அது, கிறிஸ்துவிடம் அவரது அப்போஸ்தலர்கள் விடுத்த ஒரு வேண்டுகோளாக இருந்தது: “அவர் ஒரு இடத்தில் ஜெபம்பண்ணி முடித்தபின்பு, அவருடைய சீஷரில் ஒருவன்[1] அவரை நோக்கி: ‘ஆண்டவரே, யோவான் தன் சீஷருக்கு ஜெபம்பண்ணப் போதித்துபோல, நீரும் எங்களுக்குப் போதிக்க வேண்டும்’ என்றான்” (லூக். 11:1).*

*அப்போஸ்தலர்கள் ஜெபத்தைப் பற்றிச் சற்று அறிவு கொண்டிருந் தார்கள். “அவர்கள் தங்கள் ஜெப ஆலயக் கல்வியில் தாங்கள் மனப்பாடம் செய்திருந்த ஜெபங்களை அறிந்திருந்தார்கள்.”[2] அவர்கள், “ரபீக்களின் முறைசார்ந்த மற்றும் நிலையாய் எடுத்துரைக்கப்பட்ட ஜெபங்களை, தேவாலயத்தில் ஆசாரியர்களின் [உச்சாடன] ஜெபத்தை மற்றும் பரிசேயர் களின் உரத்த, நயவசனிப்பான ஜெபங்களுக்குப் பழக்கப்பட்டிருந்தார் கள்.”[3] இருப்பினும் இயேசுவின் ஜெபங்கள் மற்றும் ஜெபவாழ்வு ஆகிய வற்றில் ஏதோ ஒரு வேறுபாடு இருந்தது. அவர்கள் அவரை, அடிக்கடி “வனாந்தரத்தில் தனித்துப்போய் ஜெபம்பண்ணிக் கொண்டிருந்த”வராகக் கண்டிருந்தார்கள் (லூக். 5:16). அவர்கள் அவரை, “தனித்து ஜெபம்பண்ண ஒரு மலையின்மேல் ஏறி[யவராக]” (மத். 14:23) மற்றும் “இராமுழுவதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக் கொண்டிருந்[தவராக]” (லூக். 6:12) கண்டிருந்தார்கள். சில காலை வேளைகளில் அவர்கள் துயில் விட்டு எழும் போது, இயேசு எழுந்து சென்றிருப்பார். அவர்கள் அவரைக் கண்டபோது, அவர் எவ்வித மாற்றமும் இன்றி ஜெபத்தில் தலைவணங்கியவாறு இருப்பார் (மாற். 1:35-37அ). மற்றும், ஜெபமானது கர்த்தருக்கு என்ன செய்திருந்தது என்பதை அவர்கள் கண்டிருந்தார்கள். அவர் தமது முழங்காலிட்ட நிலையிலிருந்து எழுந்தபோது, புதுபெலத்துடன் புது வலிவுடன், தமது*

பிதாவுடன் செய்தித் தொடர்பு கொண்ட பின்பு, மறுவலிவூட்டப் பட்டிருந்ததை அவர்கள் கண்டிருந்தார்கள். அவர் கொண்டிருந்ததை அவர்களும் கொண்டிருக்க விரும்பினார்கள். இவ்விதமாக அவர்கள், “ஆண்டவரே, எங்களுக்கு ஜெபிக்கக் கற்றுத்தாரும்” என்று வேண்டிக் கொண்டார்கள்.

இயேசுவின் பதில், நமது வேதபாடப் பகுதியில் வசனம் 2 முதல் 13 வரை காணப்படுகிறது. அவர் தமது அப்போஸ்தலர்களுக்கு, ஜெபத்தைப் பற்றிய ஒவ்வொரு விஷயத்தையும் கூறவில்லை, ஆனால் தமது ஜெபவாழ்வை மேம்படுத்திக்கொள்ள விரும்புகின்ற எவரொருவருக்கும் அவசியமான அடிப்படைச் சத்தியங்களை அவர் பகிர்ந்து கொண்டார்.

## ஜெபம் நிறைந்தவர்களாய் இருங்கள் (வ. 2-4)

முதலில் அவர், “கர்த்தரின் ஜெபம்” என்று பொதுவாக அழைக்கப்படும் ஜெபத்தை மீண்டும் கூறினார்:

> நீங்கள் ஜெபம்பண்ணும்போது: “பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக; உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக; எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை அன்றன்றும் எங்களுக்குத் தாரும்; எங்கள் பாவங்களை எங்களுக்கு மன்னியும்; நாங்களும் எங்களிடத்தில் கடன்பட்ட எவனுக்கும் மன்னிக்கிறோமே; எங்களைச் சோதனைக் குட்படப்பண்ணாமல் தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும்” என்று சொல்லுங்கள் என்றார் (வ. 2-4).

இது “சீஷர்களின் ஜெபம்” அல்லது “மாதிரி ஜெபம்” என்று மிகச் சரியாகக் குறிப்பிடப்பட முடியும். இதன் நீண்ட மற்றும் நன்கு அறியப் பட்ட பதிப்பொன்று மலைப்பிரசங்கத்தில் காணப்படுகிறது (மத். 6:9-15).[4] இந்த உதாரணத்தில் இருந்து நாம் தேவனை அணுகுதல் பற்றி அதிகமாகக் கற்றுக் கொள்ள முடியும்.

நாம் தேவனிடத்தில் அவர் நமது *பிதா*[5] என்ற வகையில் வருகின்றோம். ஜெபமானது “பிதாவே” என்ற வார்த்தையுடன் தொடங்குகிறது.

நாம் தேவனிடத்தில் அவர் ஒரு *தெய்வீகத்துவ ஜீவி* என்ற வகையில் வருகின்றோம்: “உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக.” “பரிசுத்தப் படுதல்” என்றால் “பரிசுத்தமாக நடத்துதல்” என்பதாக உள்ளது. “உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக” என்பது பத்துக் கட்டளைகளில் மூன்றாவது கட்டளையாக உள்ளது (யாத். 20:7அ). தேவனைக் கனப்படுத்தி மகிமைப்படுத்துதல் என்பதே ஒவ்வொரு ஜெபத்திலும் முதல் அக்கறையாக இருக்க வேண்டும்.

நாம் தேவனிடத்தில் அவர் *இராஜரீகம்* உள்ளவர் என்ற வகையில் வருகின்றோம்: “உம்முடைய ராஜ்யம் வருவதாக.” தேவனுடைய ராஜ்யம்

என்பது மக்களின் இருதயங்களிலும் வாழ்விலும் சர்வவல்லவரின் ஆளுகையாக உள்ளது. இப்பொழுது ராஜ்யம்/சபை என்பது நிலைநாட்டப் பட்டிருப்பதால்[6] பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்னதாக சீஷர்கள் ஜெபித்த அதே கருத்தில் இன்று நாம் "உம்முடைய ராஜ்யம் வருவதாக" என்று ஜெபிக்க முடியாது - ஆனால் நாம் இன்னமும், எங்குமுள்ள மக்கள் யாவரும் தேவனை தங்கள் வாழ்வில் ராஜாவாக முடிசூட்டுவிக்கும்படி ஜெபிப்பது அவசியமாக உள்ளது.

நாம் தேவனிடத்தில் அவர் *அளிப்பவர்* என்ற வகையில் வருகின்றோம்: "எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை அன்றன்றும் எங்களுக்குத் தாரும்." நாம் உண்ண விரும்பினால் நாம் உழைத்தாக வேண்டும் (2 தெச. 3:10ஐக் காணவும்), ஆனாலும் இன்னமும் நாம், கர்த்தரே நமது ஆசீர்வாதங்களின் ஆதாரமூலமாயிருக்கின்றார் என்பதை உணர்ந்தறிய வேண்டும் (யாக். 1:17).

நாம் தேவனிடத்தில் அவர் *நியாயாதிபதி* என்ற வகையில் நம்முடைய அடைவிடத்தைத் தம் கைகளில் பிடித்துக்கொண்டிருப்பவராக இருப்பவரிடத்தில் வருகின்றோம்: "எங்கள் பாவங்களை எங்களுக்கு மன்னியும்; நாங்களும் எங்களிடத்தில் கடன்பட்ட[7] எவனுக்கும் மன்னிக்கிறோமே." "வேறு எதைக்காட்டிலும் அதிகமாக இரு விஷயங்கள், கிறிஸ்தவ மகிழ்ச்சியையும் பயன்படு தன்மையையும் அழித்துப்போடும்: ஒருவரின் வாழ்வில் உள்ள அறிக்கையிடப்படாத மற்றும் மன்னிக்கப்படாத பாவமும், பிறருக்கு எதிராகக் கொண்டுள்ள கசப்பான, முரட்டாட்டமான, மன்னிக்காத ஆவியும்."[8] மாதிரி ஜெபமானது இவ்விரண்டைக் குறித்தும் செயல்படுகிறது.

நாம் தேவனிடத்தில் அவர் *பாதுகாப்பவர்* என்ற வகையில் வருகின் றோம்: "எங்களைச் சோதனைக்குட்படப் பண்ணாமல்." தேவன் "ஒருவரை யும் சோதிக்கிறவரல்ல" என்பதால் (யாக். 1:13), "கர்த்தாவே, எங்களை மூழ்கச் செய்யும் எந்த சோதனையினின்றும் எங்களைக் காத்தருளும்" என்பதே இந்த விண்ணப்பத்தின் அர்த்தமாக உள்ளது (யாக். 1:14, 15; 1 கொரி. 10:13 ஆகியவற்றைக் காணவும்). F. V. மெக்பேட்ரிட்ஜ் அவர்கள், பின்வரும் ஒப்புமையைப் பயன்படுத்தினார்: "பாவங்களுக்கு மன்னிப்பு என்பது பாம்புக்கடிக்குச் சிகிச்சை போன்றதாக உள்ளது; இந்த [பகுதியானது] ஜெபமானது நம்மை பாம்புகளால் பாதிக்கப்படக் கூடிய எல்லையிலிருந்து வெளியில் வைத்துக் காத்துக் கொள்ளத் தேடுகிறது."[9]

மாதிரி ஜெபமானது வாழ்வில் எல்லா விஷயங்களையும் உள்ளடக்கு கின்றது: இது *நிகழ்கால* தேவையை உள்ளடக்குகின்றது: "எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை அன்றன்றும் எங்களுக்குத் தாரும்." இது *கடந்த கால* பாவங்களை உள்ளடக்குகின்றது: "எங்கள் பாவங்களை எங்களுக்கு மன்னி யும்." இது *எதிர்கால* சோதனைகளை உள்ளடக்குகின்றது: "எங்களைச் சோதனைக்குட்படப் பண்ணாமல்."[10]

மாதிரி ஜெபத்தைப் பற்றி இன்னும் அதிகமாகக் கூறமுடியும், ஆனால் இதைப் படிப்பதிலிருந்து நாம் இங்கு ஒரு முடிவை அடையக்கூடும்: நம் யாவருக்கும் ஜெபம் அவசியமாக உள்ளது. ஆல்ஃபிரெட் லார்டு டென்னிஸன் என்பவர், "இந்த உலகம் கனவுகாணுகிறதை விட அதிகமான

விஷயங்களை நாம் ஜெபத்திலிருந்து பெற்றுக்கொள்ளுகின்றோம்" என்று எழுதினார்.[11] ரிச்சர்டு ஃபோஸ்டர் அவர்கள் ஜெபம் பற்றிய தமது புத்தகத்திற்கு இருதயத்தின் உண்மையான இல்லத்தைக் கண்டறிதல் என்ற துணைத் தலைப்பைக் கொடுத்தார்.[12] எரேமியாவிடம் தேவன், "என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து" என்று கூறினார் (எரே. 33:3அ). இயேசு, ''நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளையெல்லாம் பெறுவீர்கள்" என்று கூறினார் (மத். 21:22).

ஜெபத்தைப் பற்றிய கிறிஸ்துவின் முதல் பாடத்தைப் பின்வருமாறு தொகுத்துரைக்க முடியும்: ''ஜெபம் நிறைந்தவர்களாக இருங்கள்.'' முதலாவது, அது ஒரு வினோதமான அறிவுரைபோல உங்களை தாக்கலாம். பெரும்பாலான திறன்களுக்கு, அவற்றை நடைமுறைப் படுத்துவதற்கு முன்பு கணிசமான அளவுக்கு அறிவுறுத்தல் தேவைப்படுகிறது. இருப்பினும், ஜெபிப்பது எவ்வாறு என்று கற்றுக்கொள்வதற்கு, ஜெபிக்கத் தொடங்குதல் என்பதே நீங்கள் செய்ய வேண்டிய முதல் செயலாக உள்ளது.[13] தேவனிடம் செல்லுங்கள், ஒவ்வொரு தேவையுடனும் தேவனிடம் செல்லுங்கள்.

> நாம் பரீட்சைகளையும் சோதனைகளையும் கொண்டுள்ளோமா?
> எங்கு பார்த்தாலும் தொந்தரவு உள்ளதா?
> நாம் ஒருபோதும் உற்சாகம் இழந்துவிடக்கூடாது,
> அவற்றை ஜெபத்தில் தேவனிடம் எடுத்துச் செல்லுங்கள்.[14]

## விடாமுயற்சியுடன் இருங்கள் (வ. 5-8)

இயேசு தமது சீஷர்களை ஜெபிக்கும்படிக்கு உற்சாகப்படுத்துவதற்கு, நகைச்சுவையின் தொடுதல் கொண்ட ஒரு உவமையை அவர்களுக்குக் கூறினார்:

> உங்களில் ஒருவன் தனக்குச் சிநேகிதனாயிருக்கிறவனிடத்தில் பாதிராத்திரியிலே போய்: "சிநேகிதனே, என் சிநேகிதன் ஒருவன் வழிப்பிரயாணமாய் என்னிடத்தில் வந்திருக்கிறான், அவன் முன் வைக்கிறதற்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை, நீ மூன்று அப்பங்களை எனக்குக் கடனாகத் தரவேண்டும்" என்று கேட்டுக்கொண்டான். வீட்டுக்குள் இருக்கிறவன் பிரதியுத்தரமாக: "என்னைத் தொந்தரவு செய்யாதே, கதவு பூட்டியாயிற்று, என் பிள்ளைகள் என்னோடே கூடப் படுத்திருக்கிறார்கள், நான் எழுந்திருந்து, உனக்குத் தரக்கூடாது" என்று சொன்னான். பின்பு, தனக்கு அவன் சிநேகிதனாயிருக்கிறதினிமித்தம் எழுந்து அவனுக்குக் கொடாவிட்டாலும், தன்னிடத்தில் அவன் வருந்திக் கேட்கிறதினிமித்தமாவது எழுந்திருந்து, அவனுக்குத் தேவையானதைக் கொடுப்பான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் (வ. 5-8).

அந்த நாட்களில், உபசரிப்பு என்பது சமூகச் சீர்மையாக மட்டுமல்ல,

அது ஒரு நடைமுறைத் தேவையாகவும் ஒழுக்கரீதியான கட்டுப்பாடாகவும் இருந்தது. ஒரு சில விடுதிகளே இருந்தன, அவைகளுக்கிடையில் தூரமும் அதிகமாயிருந்தது.[15] நண்பரோ அல்லது அந்நியரோ, யாராவது தங்க இடமின்றி வந்தால், அவரை உபசரிப்பவர் உணவையும் தங்கும் இடத்தையும் (இரக்கத்துடன்) அளிக்கும்படி எதிர்பார்க்கப்பட்டார். இந்த உவமையில், ஒரு நண்பர் நள்ளிரவு வேளையில் வந்து சேர்ந்தார். அவர் ஏன் அவ்வளவு தாமதமாக வந்து சேர்ந்தார் என்று நாம் அறிவதில்லை. ஒருவேளை அவர் நேரத்தைத் தவறாக முடிவு செய்திருக்கலாம். ஒருவேளை அவர், பயணத்தில் தொந்தரவுகளைக் கொண்டிருந்து இருக்கலாம். ஒருவேளை அவர், பகலின் வெப்பத்தைத் தவிர்ப்பதற்காக இரவில் பயணம் செய்திருக்கலாம்.[16] காரணம் எதுவாக இருந்தாலும், அவர் நள்ளிரவில் எதிர்பாராத வகையில் வந்து சேர்ந்தார். தங்கும் இடம் இருந்தது, ஆனால் உணவு இல்லை; உணவு வைக்கும் அலமாரி காலியாக இருந்தது.[17]

அது மிகவும் சங்கடமான சூழ்நிலையாக இருந்தது. இரவு முழுவதிலும் உணவு விற்கும் கடைகள் அங்கு இருந்ததில்லை.[18] உபசரிப்பவர் என்ன செய்வார்? அவர், “எனக்கு நண்பர் ஒருவர் அருகில் வசிக்கின்றார். அவரது அப்பத்தைப் பகிர்ந்து கொள்ளும்படிக்கு நான் அவரிடத்தில் கேட்பேன்” என்று நினைத்தார். அவர் அந்த நண்பரின் வீட்டிற்குச் சென்றார். கதவு மூடிப் பூட்டப்பட்டிருந்தது, ஜன்னல்கள் இழுத்துச் சார்த்தப்பட்டு அடைக்கப்பட்டிருந்தன.[19] இது அம்மனிதரை வழிவிலக்கி விடவில்லை; அவர் கதவைத் தட்டினார்.[20]

அநேகமாக, தூக்கத்திலிருந்த குரல் ஒன்று வீட்டினுள்ளிருந்து வந்தது: “யாரது? உனக்கு என்ன வேண்டும்?”

வெளியில் இருந்த மனிதர், “சிநேகிதனே, என் சிநேகிதன் ஒருவன் வழிப்பிரயாணமாய் என்னிடத்தில் வந்திருக்கிறான், அவன்முன் வைக்கிறதற்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை, நீ மூன்று அப்பங்களை எனக்குக் கடனாகத் தரவேண்டும்” என்று கூறினார் (வசனங்கள் 5ஆ, 6). அவர், “ஒன்று அவருக்காகவும், ஒன்று தமது விருந்தினருக்காகவும், ஒன்று தாராளத் தன்மையின் சாட்சியாக அதிகப்படியாகவும் இருப்பதற்காக மூன்று அப்பங்களைக் கேட்டார்.”[21]

எரிச்சல்மிகுந்த பதில் ஒன்று திரும்பி வந்தது: “என்னைத் தொந்தரவு செய்யாதே, கதவு பூட்டியாயிற்று, என் பிள்ளைகள் என்னோடே கூடப் படுத்திருக்கிறார்கள், நான் எழுந்திருந்து, உனக்குத் தரக்கூடாது” (வ. 7). பல வீடுகளில் ஒரு அறைமாத்திரமே இருந்தது. இரவுவேளையில், தூங்குவதற்கான பாய்கள் தரையின்மீது விரிக்கப்படும். தம்பதிகள் பல குழந்தைகளைக் கொண்டிருந்தால், தரைமுழுவதும் மக்களால் மூடப்பட்டிருக்கும்.[22] இருட்டில் (விளக்கேற்றும் குமிழ்கள்[23] இருந்ததில்லை) எழுந்து, உங்கள் வெதுவெதுப்பான படுக்கையை விட்டுப் புறப்பட்டு (நெருப்பு அணைந்திருக்கலாம்), தூங்குபவர்களின்மீது இடறிவிழாமல் தாண்டிச் சென்று, இருளில் நீங்கள் தடுமாறுகையில், மூன்று அப்பங்களைக் கண்டறிய முயற்சி செய்தல் என்பது எவ்வாறு இருக்கும் என்று நீங்கள் சித்தரித்துப் பாருங்கள்! உண்மையில் அந்த மனிதர், “போய் விடு!” என்று கூறியது ஏன் என்பதை

உங்களால் புரிந்துகொள்ள முடியும்.

இருப்பினும், கேட்ட மனிதர் "இல்லை" என்பதை ஒரு பதிலாக எடுத்துக்கொள்ள மாட்டார். இயேசு "தனக்கு அவன் சிநேகிதனாயிருக்கிறதினிமித்தம் எழுந்து அவனுக்குக் கொடாவிட்டாலும், தன்னிடத்தில் அவன் வருந்திக் கேட்கிறதினிமித்தமாவது எழுந்திருந்து, அவனுக்குத் தேவையானதைக் கொடுப்பான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார் (வ. 8). பின்னிகழ்ந்த உரையாடலைக் கற்பனை செய்தல் கடினமானதாக இருப்பதில்லை:

(டொக், டொக், டொக்.)

"போய் விடு என்று நான் சொன்னேனே! என் பிள்ளைகளைப் படுக்க வைப்பதற்கு எனக்கு ஒரு மணி நேரமாயிற்று. அவர்கள் விழித்துக் கொண்டால், நான் இன்றிரவு சற்றேனும் தூங்க முடியாது!"

"ஆனால் எனக்கு அப்பம் வேண்டுமே!"

"இல்லை!"

(டொக், டொக், டொக்.)

"அதை நிறுத்து! நீ தொடர்ந்து தட்டிக் கொண்டிருந்தால், என் மனைவியையும் எழுப்பி விடுவாய். நீ அவ்வாறு செய்தால், நாம் இருவரும் தொந்தரவில் இருப்போம். எனது மனைவி மகிழ்ச்சியாக இல்லாதபோது, எவரொருவரும் மகிழ்ச்சியாக இருப்பதில்லை!"[24]

"ஆனால் எனக்கு அப்பம் வேண்டுமே!"

"இல்லை!"

(டொக், டொக், டொக்.)

"சரி, சரி, சரி. இப்போது நீ ஒவ்வொருவரையும் எழுப்பி விட்டாய்! அந்தப் பயங்கரமான தட்டுதலை நிறுத்து, நான் எதையாவது கண்டறிய முடியுமா என்று பார்க்கின்றேன்!"

"Persistence" என்று NASBயில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை (KJVயிலும் இன்னும் சில மொழிபெயர்ப்புகளிலும் "importunity" என்றுள்ளது) "வெட்கம்" என்ற நேரடி அர்த்தம்கொண்ட ஒரு கிரேக்க வார்த்தையில் இருந்து வருகிறது. இது, உபசரிப்பவர் தமது விருந்தினருக்குத் தேவையானதை அளிக்காதிருந்தால் அவர் (உபசரிப்பவர்) வெட்கமடைவார் என்ற உண்மையைக் குறிக்கிறது. அவர் நிச்சயமாகவே தமது விடாமுயற்சியில் "வெட்கமற்றவராக" இருந்தார். அவர் தொடர்ந்து தட்டிக் கொண்டிருக்கையில், அயலகத்தார் யாவரும் எழுந்திருந்திருக்க வாய்ப்புண்டு. விளக்குகள் ஏற்றப்பட்டிருக்கும். நாய்கள் குலைத்திருக்கும். அவரிடத்தில் சத்தமிடாதிருக்கும்படி கோபக்குரல்கள் கூறியிருக்கும். அவரது முகம் அநேகமாகச் சிவந்திருக்கும். இருந்தபோதிலும் அவர், அப்பத்தைப் பெறும்வரையிலும் விடாமுயற்சியுடன் இருந்தார்.

தேவன், நாம் கேட்பதைக் கொடுக்கும்படி பலவந்தமாகக் கீழ்ப்படியப் பண்ணவேண்டிய தயக்கம் கொண்ட ஒரு நண்பராக இருக்கின்றார் என்று போதிப்பது இந்த உவமையின் நோக்கமாக உள்ளதா? இல்லை. ஜெபத்தைப் பற்றிய இயேசுவின் போதனை வேளையின்போது பயன்படுத்தப்பட்ட கடைசியான விவரிப்பை வசனம் 13ல் கண்ணோக்குங்கள்: "பொல்லாதவர்

களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?" இந்த உவமையின் செய்தியைப் பின்வருமாறு விளக்கப்படுத்தலாம்: "தயக்கமுள்ள ஒரு நண்பரை, நீடிய பொறுமையின்மூலமாக, ஒரு வேண்டுகோளை நிறைவேற்றும்படி இணங்கச் செய்யலாம் என்றால், நீங்கள் நீடிய பொறுமையுடன் இருந்தால், உங்களை ஆசீர்வதிக்கத் தயாராகவும் விருப்பமுமுள்ள உங்கள் பரலோக பிதா எவ்வளவு அதிகமாய் உங்கள் வேண்டுகோளுக்குப் பதில் அளிப்பார்!" இதே போன்ற கதைக் கருவுடன் கூடிய இன்னொரு உவமையை இயேசு பிற்பாடு தமது சீஷர்களுக்குக் கூறினார், அதில் பின்வரும் வார்த்தைகள் முகவுரையாக அமைந்திருந்தன: "சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபம்பண்ண வேண்டும் என்பதைக் குறித்து அவர்களுக்கு அவர் ஒரு உவமையைச் சொன்னார்" (லூக். 18:1). "தேவனுடைய தயக்கத்தை எவ்வாறு வெற்றி கொள்வது என்பதைக் கூறுவதல்ல, ஆனால் அவரது மனவிருப்பத்தின் பற்றுதலில் எவ்வாறு சாய்ந்திருப்பது என்பதைப் போதிப்பதே" இந்த உவமையின் நோக்கமாக உள்ளது என்று கிறிஸ் புல்லார்டு அவர்கள் கூறினார்.[25]

நாம் நமது வேண்டுதல்களில் *தீவிரமாக* இருக்கின்றோம் என்பதை அறிவதற்குத் தேவன் விரும்புகின்றார். அவர் அரைமனதான ஜெபங்களுக்குப் பதில் அளிப்பதில்லை. மிகவும் அதிகமான ஜெபங்கள் சுலபமாக உச்சரிக்கப்பட்டு, துரிதமாக மறந்துபோகப் படுகின்றன. நமது ஜெபங்கள் தேவனிடத்தில் செல்வாக்குப் பெறுவதற்கு முன்பு, அவைகள் முதலில் நம்மிடத்தில் செயல்விளைவை ஏற்படுத்த வேண்டும். அவைகள் நமது இருதயங்களில் இருந்து வரவேண்டும்!

## பொறுமையாயிருங்கள் (வ. 9, 10)

விடாமுயற்சியின்மீதான வலியுறுத்தமானது இயேசுவின் அடுத்த வார்த்தைகளில் தொடர்ந்தது: "மேலும் நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்; ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக் கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்" (வ. 9, 10). நீங்கள் இந்த உவமையுடன் இயல்பான பிணைப்பொன்றைக் காணமுடியும்: சங்கடமடைந்த உபசரிப்பாளர் தமது நண்பருக்காக அப்பத்தைத் *தேடினார்*, அவர் இன்னொரு நண்பரின் கதவைத் *தட்டினார்*, மற்றும் அவர் தேவையான பொருட்களைக் *கேட்டார்*.

நமக்குத் தேவையானவற்றை நாம் தேவனிடத்தில் *கேட்க* வேண்டும் என்பது இந்த வசனங்களில் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரு பாடமாக உள்ளது. யாக்கோபு, "நீங்கள் விண்ணப்பம் பண்ணாமலிருக்கிறதினாலே, உங்களுக்குச் சித்திக்கிறதில்லை" என்று எழுதினார் (யாக். 4:2இ).

நமது வேண்டுகோள்களில் நாம் *விடாமுயற்சியுடன்* இருக்கவேண்டும்

*என்றும் இவ்வசனங்கள் வலியுறுத்துகின்றன. "கேளுங்கள்," "தேடுங்கள்," மற்றும் "தட்டுங்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தைகள் யாவும், மூலவேதவசனத்தில் நிகழ்கால வினைச் சொல்லாகவே உள்ளன, இது தொடர்ந்து செய்யப்படும் செயலைச் சுட்டிக்காண்பிக்கிறது. வசனம் 9, "தொடர்ந்து கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தொடர்ந்து தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தொடர்ந்து தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்" என்றே நேரடியாக அர்த்தப்படுகிறது. சோதோம் மற்றும் கொமோரா நகரங்களுக்காகத் தமது ஜெபத்தில் விடாமுயற்சியுடன் இருந்த ஆபிரகாமைப் பற்றி நினைத்துப் பாருங்கள் (ஆதி. 18:22-32). தமது சரீரத்தில் இருந்த ஒரு முள்ளைக் குறித்துத் தமது ஜெபத்தில் விடாமுயற்சியுடன் இருந்த பவுலைப் பற்றி நினைத்துப் பாருங்கள் (2 கொரி. 12:8). வியர்வையானது இரத்தத்தின் பெருந்துளி களாய்த் தரையில் விழும்வரையில் தோட்டத்தில் தமது ஜெபத்தில் விடாமுயற்சியுடன் இருந்த கிறிஸ்துவைப் பற்றி நினைத்துப் பாருங்கள் (லூக். 22:44). இம்மூவரும் தங்கள் ஜெபங்களுக்குப் பதில் அளிக்கப்படும் வரையிலும் விடாமுயற்சியுடன் இருந்தார்கள்.[26]*

*இந்த வாக்கியத்தில் உள்ள வினைச்சொல்லின் ஒழுங்குமுறையானது விடாமுயற்சியை மட்டுமின்றி அதிகமாகும் வலிவுறுதியையும் மறைமுக மாய் உணர்த்துகிறது. தேடுதல் என்பது கேட்பதை விட அதிகமானதாக உள்ளது, தட்டுதல் என்பதில் தேடுதலைவிட அதிகமானது உள்ளடங்கி யுள்ளது. நமது ஜெபங்கள் ஊக்கமானவைகளாக இருக்க வேண்டும். "நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதா யிருக்கிறது" (யாக். 5:16ஆ).[27]*

*நாம் ஏன் ஜெபிக்க வேண்டும்? நாம் ஜெபத்தில் ஏன் விடாமுயற்சி யுடன் இருக்க வேண்டும்? நமது ஜெபங்கள் ஏன் ஊக்கமுள்ளவைகளாக இருக்க வேண்டும்? ஏனென்றால், நமது வேத பாடப் பகுதியின்படியாக, தேவன் ஜெபத்திற்குப் பதில் அளிக்கின்றார். இந்த வசனங்களில், ஒவ்வொரு செயலுக்கும் ஏற்புடைய பதில் ஒன்றுள்ளது: கேட்கிறவர் பெற்றுக்கொள்ளு கின்றார், தேடுகின்றவர் கண்டடைகின்றார், தட்டுகிறவருக்குக் கதவு திறக்கப்படுகிறது. விடாமுயற்சியுடன் இருந்த உபசரிப்பாளரைப் பற்றிய உவமையில் இந்த சத்தியம் விவரிக்கப்பட்டது: கேட்டல், தேடுதல், தட்டுதல் ஆகியவற்றைச் செய்த மனிதர் தமக்குத் தேவையான அப்பங் களைப் பெற்றுக்கொண்டார்.*

*இது, தேவன் தமது பிள்ளைகளால் ஏற்படுத்தப்படுகின்ற ஒவ்வொரு வேண்டுகோளுக்கும் "ஆம்" என்று பதில் அளிப்பதாக அர்த்தப்படுகிறதா? இல்லை. பாடுகளின் "பாத்திரம்" நீக்கப்பட வேண்டும் என்று கிறிஸ்து விண்ணப்பம் செய்தார் (மத். 26:39), ஆனால் அது நீக்கப்படவில்லை. துன்பப்படுத்திய தமது "முள்ளானது" எடுத்துப் போடப்பட வேண்டும் என்று பவுல் விண்ணப்பம் செய்தார் (2 கொரி. 12:7, 8), ஆனால் அது எடுத்துப்போடப்படவில்லை. நமது அடுத்த வேதபாடப் பகுதியானது (லூக். 11:11-13) தேவனை பூமிக்குரிய தந்தையர்களுடன் ஒப்பிடுகிறது. நம்மில் தந்தையர்களாக இருக்கின்றவர்கள் நமது பிள்ளைகளின்*

*வேண்டுகோள்களுக்கு எப்போதுமே "ஆம்" என்று சொல்லுகின்றோமா?*[28] *இல்லையே! சில வேளைகளில், "இல்லை" அல்லது "சற்றுப் பொறு" என்பதே பதிலாக உள்ளது.*[29] நாம் "இல்லை, ஆனால் இங்கு அதை விடச் சிறந்தது உள்ளது" என்று கூடக் கூறலாம். இருப்பினும், நாம் நமது பிள்ளைகளின்மீது அன்புகூர்ந்தால், அவர்களின் வேண்டுகோள்களுக்கு எப்போதுமே பதில் *அளிக்கின்றோம்* - அதுவே 8முதல் 10வரை உள்ள வசனங்களில் ஏற்படுத்தப் பட்ட கருத்தாக உள்ளது: நாம் விடாமுயற்சியுடனும் பொறுமையுடனும் இருந்தால், தேவன் நமது ஜெபங்களுக்குப் பதில் *அளிக்கின்றார்.*

## நேர்மறையாயிருங்கள் (வ. 11-13)

நாம் உச்சரிக்கின்ற ஜெபங்களைப் பற்றி நாம் நேர்மறையாக நிலைத்திருப்பதற்கு ஒவ்வொரு காரணத்தையும் நாம் கொண்டுள்ளோம். இந்த உண்மை கிறிஸ்துவின் வார்த்தைகளின் முடிவில் மீண்டும் உறுதியாக்கப்படுகிறது:

> *உங்களில் தகப்பனாயிருக்கிற ஒருவனிடத்தில் மகன் அப்பங் கேட்டால், அவனுக்குக் கல்லைக் கொடுப்பானா? மீனைக்கேட்டால் மீனுக்குப் பதிலாய்ப் பாம்பைக் கொடுப்பானா? அல்லது முட்டை யைக் கேட்டால், அவனுக்குத் தேளைக் கொடுப்பானா? பொல்லாத வர்களாகிய*[30] *நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா? (வ. 11-13).*

*காட்சி ஒன்று.* ஒரு பையன் தனது தந்தையிடம் வந்து மீன் ஒன்று வேண்டும் என்று கேட்கின்றான். இது அந்தப் பகுதியில் சிற்றுண்டியாக வழங்கப்படுகிற, மிகச் சிறிய, பதனிடப்பட்ட மீனாக இருக்கும்.[31] தந்தை, ''சரி'' என்று புன்னகையுடன் கூறுகின்றார். பையன் தனது கையை நீட்டுகின்றான், அவனது தந்தையோ, வளைந்து நெளிகிற ஒரு சிறிய பாம்பைக் கொடுக்கின்றார்! அது ஒரு அதிர்ச்சியாயிருக்கும்!

*காட்சி இரண்டு.* ஒரு பையன் தனது தந்தையிடம் வந்து முட்டை ஒன்று வேண்டும் என்று கேட்கின்றான். இது அநேகமாக, நன்கு வேக வைக்கப்பட்ட ஒரு முட்டையாக, ஒரு சிறு பையன் கையில் வைத்துக் கொண்டு, அவனுக்குப் பசி ஏற்படும்போது உண்ணக்கூடியதாக இருக்கும். "உனக்கு [முட்டை] ஒன்று தருவதில் எனக்கு மகிழ்ச்சியே" என்று கூறிய தந்தை, ஒரு சிறு கூடையை நீட்டுகின்றார். "இதனுள் தேடி எடுத்துக்கொள்" என்று கூறுகின்றார். அந்தப் பையன் கூடையினுள் கையை விடுகின்றபோது, அங்கு முட்டை எதுவும் இல்லை - அங்கு தாக்குவதற்குத் தயாராக, வாலைச் சுழற்றிக் கொண்டு ஒரு தேள்தான் இருக்கிறது![32] எவ்வளவு பயங்கரம்!

தங்கள் பிள்ளைகளைக் குறித்து அக்கறையாக இருக்கின்ற தந்தையர்கள் அவர்களிடம் இரக்கமற்ற முறையில் விளையாடுவதில்லை, மற்றும் நமது பரமபிதாவும் அவ்வாறு செய்வதில்லை என்று இயேசு கூறினார். "பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக்

*கொடுக்க அறிந்திருக்கும்போது, பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?" (வ. 13). முன்னதாக, கர்த்தர் இதே ஒப்புமையைப் பயன் படுத்தியபோது அவர், "பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா, தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயமல்லவா?" என்று கூறியிருந்தார் (மத். 7:11ஆ). இப்போது பல மாதங்களுக்குப் பின்பு, அவர் தேவனுடைய மிக நேர்த்தியான வரங்களில் ஒன்றைத் திட்டவட்டமாகக் குறிப்பிட்டார்: பரிசுத்த ஆவியானவரின் வரம், இது பிற்பாடு அவருடைய நாமத்தில் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்ட யாவருக்கும் பொழிந்தருளப்படும் (அப். 2:38). லியோன் மோரீஸ் அவர்கள் பின்வருமாறு எழுதினார்:*

> லூக்கா ... ஆவியானவருடைய வரத்தை நமது மிக உயர்வான நன்மையாகக் கண்ணோக்குகின்றார். இதை "அபிஷேக" வரங்கள் என்ற சொற்றொடர்களில் புரிந்துகொள்வதற்கான காரணம் எதுவும் இருப்பதாகக் காணப்படவில்லை. மாறாக, இது ரோமர் 8ல் கூறப் பட்டதுபோல, கிறிஸ்தவரின் வாழ்வில் பொதுவாக ஆவியானவரின் கிரியைக்கான குறிப்பைக் கொண்டுள்ளது.[33]

*ஒவ்வொரு வேண்டுகோளுக்கும் தேவன் ''ஆம்'' என்று பதில் அளிப்பதில்லை என்று நாம் முன்பே குறிப்பிட்டோம், ஆனால் அவர் தமது பிள்ளைகளின் ஒவ்வொரு ஜெபத்திற்கும் பதில் அளிக்கின்றார். அவர் அதைச் செய்யும்போது, அவர் எப்போதுமே "நன்மையானவற்றை" கொடுக் கின்றார். நீண்ட காலத்திற்கு நமக்கு எது நல்லதாக இருக்கும் என்பதே அவரது அடிப்படையான அக்கறையாக உள்ளது. தற்போதைக்கு அவரது பதில் நல்லது என்று நாம் காணாதிருக்கலாம், ஆனால் கடைசியில் நாம், ''அன்றியும் அவரது தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது'' என்று தைரியமாய் இருக்க முடியும் (ரோமர் 8:28). நாம் ஜெபிக்கையில், நேர்மறையாக நிலைத்திருப்பதற்கு ஒவ்வொரு காரணத்தை யும் கொண்டுள்ளோம்!*

## முடிவுரை

*எவ்வாறு ஜெபிப்பது என்பதைக் கற்றுக்கொள்வது சீஷர்களுக்கு முக்கியமானதாக இருந்தது. அவர்களுக்கு முன்பாக கெத்சமெனே, அவர்களின் எஜமானர் விசாரிக்கப்படுதல்கள், அவர் அடிபடுதல், இரத்தத் தாகம் கொண்ட கும்பலின் ஏளனக்குரல்கள், சிலுவையின் பயங்கரம், மற்றும் கல்லறையின் இருள்மிக்க அமைதி ஆகியவை காத்துக் கிடந்தன.[34] இன்றைய நாட்களில், நாமும்கூட, சோதனைகளையும் பரீட்சைகளையும் எதிர்கொள்ளுகின்றோம். நாமும் எவ்வாறு ஜெபிப்பது என்பதைக் கற்றுக்கொள்வது சம அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. ஜெபத்தைப் பற்றி இன்னும் மிக அதிகமாகக் கூறமுடியும், ஆனால் லூக்கா*

*11:1-13ன் சத்தியங்கள், நாம் தொடங்குவதற்குப் போதுமானவைகளா யிருக்க வேண்டும்:*

- *ஜெபம் நிறைந்தவர்களாயிருங்கள்: செய்வதினால் நீங்கள் கற்றுக் கொள்ளுகின்றீர்கள்.*
- *விடாமுயற்சியுடன் இருங்கள்: விடாமுயற்சியினால் நீங்கள் வெற்றி பெறுகின்றீர்கள்.*
- *பொறுமையாயிருங்கள்: கேட்பதினால் நீங்கள் பெற்றுக் கொள்ளுகின்றீர்கள்.*
- *நேர்மறையாயிருங்கள்: ஜெபிப்பதினால் நீங்கள் ஆசீர்வதிக்கப் படுவீர்கள்.*

*இருப்பினும், நீங்கள் தேவனை உண்மை நிறைவுடன் "பிதாவே" என்று அழைக்க முடியாத வரைக்கும் (லூக். 11:2), வலிவார்ந்த ஜெபவாழ்வு ஒன்று தொடங்கப்பட முடியாது என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். நீங்கள் தேவனுடைய பிள்ளையாக இருக்கின்றீர்களா (கலா. 3:26, 27)? நீங்கள் "ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறந்திருக்கின்றீர்களா" (யோவா. 3:5; 1 பேது. 1:23; அப். 2:38ஐக் காணவும்)? நீங்கள் ஏற்கனவே தேவனுடைய பிள்ளையாயிருந்தால், உங்கள் பிதாவுடன் நீங்கள் நெருக்கமாக நிலைத்து இருக்கின்றீர்களா? பாவம் என்ற ஒன்று மட்டுமே உங்களுக்கும் தேவனுக் கும் இடையில் [பிரிக்கும் விஷயமாக] நிற்க முடியும் (ஏசா. 59:1, 2). உங்கள் பாவத்தைக் கழுவுவதற்கு நீங்கள் ஞானஸ்நானம் பெற வேண்டியது அவசியமானால் (அப். 22:16) அல்லது, நீங்கள் கர்த்தரிடமாய்த் திரும்ப வேண்டிய நிலையிலுள்ள தவறுசெய்யும் கிறிஸ்தவராயிருந்தால் (கலா. 6:1; அப். 8:22; யாக். 5:16), அதை அப்படியே தள்ளிப் போட்டுவிடாதீர்கள். அதை இப்போதே செய்யுங்கள்!*

## குறிப்புகள்

F. V. மெக்ஃபேட்ரிட்ஜ் அவர்கள், லூக்கா 11:1-13ஐ, "ஜெபத்தின் அரிச்சுவடி" என்று அழைத்தார்.[35] "உங்கள் ஜெபவாழ்வுக்கு நல்லதொரு தொடக்கத்தைப் பெறுவது எவ்வாறு?" என்பது சாத்தியமான இன்னொரு தலைப்பாக இருக்கும். உங்கள் உரையைக் கேட்பவர்கள் புரிந்துகொள்ளக் கூடும் என்றால், "உங்கள் ஜெபவாழ்வைத் தாண்டித் தொடங்குவது எவ்வாறு?" என்பது பற்றி நீங்கள் பேசமுடியும். "வல்லமை நிறைந்த ஜெபத்திற்கான இரகசியம்" என்பது இன்னொரு அணுகுமுறையாக இருக்கும். இயேசு தமது ஜெபவாழ்வைப் பற்றி முன்னதாக எடுத்துரைத் திராத "இரகசியம்" ஒன்றைக் கொடுக்கப் போகின்றார் என்பதாக அவரது சீஷர்கள் நினைத்திருந்தால், அவர்கள் ஏமாற்றம் அடைந்திருப்பார்கள்; அடிப்படையில் அவர், தாம் முன்பு கூறியதையே திரும்பவும் கூறினார். ஜெபத்தைப் பற்றி நாம் கற்றுக்கொள்ள அவசியமான அற்புத "இரகசியம்" என்று எதுவும் இருப்பதில்லை; நாம் என்ன செய்ய வேண்டும் என்று அறிந்துள்ளோமோ, அதைச் *செய்வதற்கு* நாம் தீவிரமாயிருக்க வேண்டும், அவ்வளவே.

*குறிப்புகள்*

[1]*இந்த வேண்டுகோள் ஒரு சீஷரிடத்திலிருந்து வந்தது; ஆனால் இவர், "எங்களுக்குப் போதிக்கவேண்டும்" என்று கூறியதால், இவர் அநேகமாக எல்லாச் சீஷர்களுக்காகவும் பேசியிருப்பார்.* [2]John T. Carroll and James R. Carroll, *Preaching the Hard Sayings of Jesus* (Peabody, Mass.: Hendrickson Publishers, 1996), 120. [3]F. V. McFatridge, *Lord, Teach Us to Pray* (Nashville: Broadman Press, 1956), 1. [4]*சீஷர்கள் இயேசுவினிடத்தில் தங்களுக்கு ஜெபிக்கப் போதிக்கும்படி கேட்டபோது, அவர் அதற்கு முன்னதாகவே பேசியிருந்த சத்தியங்களையே மீண்டும் பிரதானமாக எடுத்துரைத்தார். ஒருவேளை அவர்கள் அவரது அறிவுறுத்தலை மறந்திருக்கலாம். ஒருவேளை, அவர்கள் இயேசுவின் ஜெபங்களினுடைய வல்லமையைக் கண்டபோது, அவர் தங்களிடத்தில் இன்னும் பகிர்ந்து கொண்டிராத ஜெபத்தின் "இரகசியம்" ஏதாவது இருக்கலாம் என்று நினைத்திருப்பார்கள். எந்த வகையிலும், அவர்கள் இதற்கு முன்பு கேட்டிருந்த சத்தியங்களை நாம் யாவரும் செய்வது போலவே மீண்டும் நினைவுபடுத்தப்பட வேண்டியது அவசியமாக இருந்தது.* [5]*ரோமர் 8:15; கலா. 4:6; 1 பேது. 1:17 ஆகிய வசனங்களைக் காணவும்.* [6]*மேசியாவின் ராஜ்யம் நிலைநாட்டப்படுதல் என்பது அந்த நாட்களில் ஒரு அடிப்படை அக்கறைக்குரிய விஷயமாக இருந்தது. அது இயேசுவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றிற்குப் பின்பு வந்த முதல் பெந்தெகொஸ்தே நாளன்று நடைபெற்றது (மாற். 9:1; அப். 1:8; அப். 2:1-4).* [7]*"கடன்பட்டவர்கள்" என்பது பணரீதியான கடனையல்ல ஆனால் பாவத்தின் கடனைக் குறிக்கிறது என்பதை சந்தர்ப்பப் பொருள் தெளிவாக்குகிறது. இது, நமக்கு எதிராகப் பாவம் செய்த ஒவ்வொருவரையும் குறிப்பதாக உள்ளது.* [8]McFatridge, 40. [9]Ibid., 47. [10]This is a summary of William Barclay's words in *The Gospel of Luke,* rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1975), 144.

[11]From Alfred, Lord Tennyson, "Morte D'Arthur," *Great Poems of the English Language,* comp. Wallace Alvin Briggs (New York: Tudor, 1933), 795. [12]Richard Foster, *Prayer: Finding the Heart's True Home* (San Francisco: Harper, 1992), quoted in Carroll and Carroll, 122, 127. [13]*அமெரிக்காவில் நீங்கள், குறிப்பிட்ட கம்பெனியாரின் விளையாட்டு வகைக் காலணிக்கான விளம்பரம் ஒன்றில் வரும்* "Just do it!" *என்ற விளம்பர வார்த்தைகளைப் பயன்படுத்த முடியும்.* [14]Joseph M. Scriven, "What a Friend We Have in Jesus," *Songs of Faith and Praise,* comp. and ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1994). [15]*மேலும், ஒருவர் தமது நண்பரை அங்கு அனுப்ப விரும்பாத அளவுக்கு பல தங்கும் விடுதிகள் மதிப்பற்றவைகளாயிருந்தன.* [16]*உலகில் நான் வாழும் பகுதியில், நாங்கள் பின்வரும் நகைச்சுவைத் தொடுதல் ஒன்றைக் கூட்டிக்கொள்ளுவதுண்டு: "போக்குவரத்து மோசமாக இருந்திருக்கலாம். அவரது வாகனத்தின் டயரில் பங்ச்சர் ஏற்பட்டிருக்கலாம்."* [17]*உங்கள் உரையைக் கேட்பவர்கள் பின்வரும் குழந்தைகளின் பாடலுக்குப் பழக்கப்பட்டிருந்தால் இதைக் கூறலாம்:* "Like Mother Hubbard's cupboard, his was bare." [*இதற்கு இணையாகத் தமிழில் ஒரு குழந்தைகளின் பாடல் உண்டு. இது அனைவருக்கும் பழக்கமானதே: "வட்டமான தட்டு … தட்டு நிறைய லட்டு … மொத்தம் தீர்ந்ததெட்டு, மீதம் காலித் தட்டு!"*] [18]*நான் வாழும் இடத்தில், எங்கள் பகுதியில் உள்ள முழு இரவுக் கடைகளின் பெயர்களை இவ்விடத்தில் நாங்கள் கூடுதலாகக் கூறமுடிந்தது.* [19]*கதவுகளும் ஜன்னல்களும் பகலில் திறந்தும் இரவில் மூடப்பட்டும்*

இருந்தன. மூடப்பட்ட கதவுகள் மற்றும் ஜன்னல்கள், ‘‘எங்களைத் தனியே விட்டுவிடுங்கள்; தொந்தரவு செய்யவேண்டாம்’’ என்று அர்த்தப்படுத்தின. [20]நாடக பாணியிலான ஒரு தொடுதலைக் கூட்டுவதற்கு, நீங்கள் - இவ்விடத்திலும், இவ்வரலாற்றில் தட்டுதலைக் குறிப்பிடும் பிற இடங்களிலும் - [பேச்சாளரின் தாங்கியை] பிரசங்க மேடையைத் தட்டலாம். உவமையானது தட்டுதலைக் குறிப்பிடவில்லை ஆனால் நடைமுறைப் பயன்பாடு அதைக் குறிப்பிடுகிறது (லூக். 11:9, 10). தட்டுதல் என்பது தூங்குகின்ற மனிதரின் கவனத்தைப் பெறுவதற்கான இயல்பான வழிமுறையாக உள்ளது. உங்கள் பகுதியில் மூடப்பட்ட வீட்டினுள் இருக்கும் மனிதரின் கவனத்தைப் பெறுவதற்குப் பயன்படுத்தப்படும் வழிமுறைகளை நீங்கள் இவ்விடத்தில் தழுவியமைத்துக் கொள்ளலாம்.

[21]J. W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or A Harmony of the Four Gospels* (Cincinnati: Standard Publishing Co., 1914), 480. [22]அமெரிக்காவில் நாங்கள், ‘‘தரையானது சுவரிலிருந்து சுவர் வரை மக்களால் நிறைந்திருந்தது’’ என்று கூறுவதுண்டு. குடும்பத்தார் உறங்கிய உயர்ந்த பகுதி போன்ற மற்ற விவரங்களைப் பெரும்பாலான விளக்கவுரைகள் குறிப்பிடுகின்றன, ஆனால் இந்த விவரங்கள் வரலாற்றை உயர்த்துவதாகக் காணப்படுவதில்லை. குளிரான காலசூழ்நிலையில், விலங்குகளும் இரவில் வீட்டினுள் பாதுகாக்கப்பட்டன என்று சில எழுத்தாளர்கள் கூடுதலாகக் கூறுகின்றனர். இப்போது, இம்மனிதர் இருளில் எழுந்தால் ஏற்படும் பொதுவான குழப்பத்தில் அதுவும் சேர்க்கப்படலாம். [23]உலகில் நான் வாழும் பகுதியில், (நகைச்சுவைக்காக) நாங்கள் “and no clap-on-clap-off lamps” என்று கூடுதலாகக் கூறுவோம். [24]இந்த வாக்கியம் எனது நண்பரான பாப் லியோன்ஸ் என்பவரின் கூற்றில் இருந்து தழுவியமைக்கப்பட்டுள்ளது. அவர், ‘‘அம்மா மகிழ்ச்சியாக இல்லையென்றால், எவரொருவரும் மகிழ்ச்சியாக இல்லை!’’ என்று கூறுகின்றார். [25]Chris Bullard, “How to Be an Intercessor,” sermon preached at the Overland Park church of Christ, Overland Park, Kansas, 13 May 1985. [26]வின்ஸ்ட்டன் சர்ச்சில் யார் என்பதை அறிந்தவர்கள் இருக்கும் இடத்தில் நீங்கள் இதைப் பிரசங்கித்தால் நீங்கள் ‘‘வின்ஸ்ட்டன் சர்ச்சிலின் புகழ்பெற்ற வார்த்தைகளைத் தழுவியமைப்பதென்றால், நீங்கள் ஜெபிக்கும்போது, ஒருக்காலும், ஒருக்காலும், ஒருக்காலும், ஒருக்காலும் சோர்ந்துவிடாதீர்கள்’’ என்று கூறமுடியும். [27]“ஊக்கமான” என்ற வார்த்தை பெரும்பாலான மொழிபெயர்ப்புகளில் காணப்படுவதில்லை, ஆனால் இங்கு பயன்படுத்தப்பட்ட வினைச் சொல்லில் இது மறைவாக உணர்த்தப்படுகிறது. [28]உங்கள் உரையைக் கேட்பவர்களுக்கு ஏற்புடைய விளக்கங்களைப் பயன்படுத்த நீங்கள் விரும்பலாம். நான், “அவர்கள் போக்குவரத்து மிகுந்த சாலையில் விளையாடலாமா என்று கேட்டால் நான் என்ன சொல்லுவேன்? அவர்கள் கேக் மற்றும் ஐஸ்கிரீம் ஆகியவற்றைத் தவிர வேறெதையும் உண்ணாதிருக்கலாமா என்று கேட்டால் நான் என்ன சொல்லுவேன்?’’ என்று கூறுவதுண்டு. நீங்கள் உங்கள் பிள்ளைகளில் ஒருவர் உங்களிடம் கேட்டு நீங்கள் அதை அனுமதித்திராத வேண்டுகோள் ஒன்றின் உதாரணத்தையும் இவ்விடத்தில் பயன்படுத்தலாம். [29]ஒரு ஜெபத்திற்குத் தேவன் பதில் அளிக்கும் பல்வேறு வழிமுறைகளின் கலந்துரையாடல் பற்றிய எனது விரித்துரைத்தலுக்கு இங்குள்ள இடம் என்னை அனுமதிப்பதில்லை, ஆனால் நீங்கள் அதைச் செய்ய விரும்பலாம். “சற்றே பொறுங்கள்” என்ற பதில் பற்றி, யாரோ ஒருவர், “தேவனுடைய தாமதங்கள் தேவனுடைய மறுத்தல்களாக இருப்பதில்லை’’ என்று கூறியுள்ளார். [30](பொறுப்பேற்கும் வயது வந்த) ஒவ்வொரு மனிதரும் பாவத்தினால் - தம் சொந்தப் பாவத்தினால் - கறைபடிந்துள்ளார் (ரோமர் 3:23; 6:23).

[31]இது இயேசு ஐயாயிரம் பேருக்கு உணவளித்தபோது அவரால் பயன்படுத்தப்

*பட்ட வகையான மீனாயிருக்கலாம். [32]ஒரு சிறிய பாம்பு ஒரு ஒல்லியான மீனைப் போல் இருக்கும் என்பதாலும், சுருண்டிருக்கும் ஒரு தேளானது ஒரு முட்டையைப் போலக் காணப்படும் என்பதாலும், இந்த விவரிப்பில் உள்ள தந்தையர்கள் தங்கள் மகன்களைத் தந்திரமாய் வஞ்சிக்க முயற்சித்ததாகச் சித்தரிக்கப்பட்டுள்ளனர் என்று ஒரு கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னதாக இந்த விவரிப்பை இயேசு பயன்படுத்தியபோது, அவர் அப்பம் - கல் என்ற கூற்றையும் கூடுதலாகக் கூறியிருந் தார் (மத். 7:9). வட்டமான, மரக்கலருடைய ஒரு கல்லானது அந்த நாட்களில் இருந்த ஒரு சிறிய அப்பம் போன்று இலகுவாகத் தோன்றியிருக்கக்கூடும். [33]*Leon Morris, *Luke*, rev. ed., Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1995), 214-15. *ஒரு கேள்வி எழும்பலாம்: ''ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும் எல்லாருக்கும் தேவன் வாக்களித்துள்ள ஒரு வரத்தை அவரிடம் ஏன் கேட்க வேண்டும்?'' தேவன் வாக்களித்துள்ளவற்றை அவரிடத்தில் கேட்பது என்பது எப்போதுமே சரியானதாகவே உள்ளது. எடுத்துக்காட்டாக, விசுவாசிகளுக்குத் தேவன் வாழ்வின் அத்தியாவசியத் தேவைகளைக் கொடுப்பதாக வாக்களித்திருப்பினும் (மத். 6:33), அன்றாட உணவை அவரிடத்தில் கேட்பது இன்னமும் சரியானதாகவே உள்ளது (மத். 6:11). கேட்டல் என்பது நன்மையான எல்லா வரங்களின் ஆதாரமூலம் பற்றிய மனப்பதிவை நமது சிந்தைகளில் ஏற்படுத்துகிறது. [34]இந்த வாக்கியம் மெக்ஃபேட்ரிட்ஜ், 3 அவர்களின் கூற்றிலிருந்து தழுவப்பட்டுள்ளது. [35]*McFatridge, 5.